டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,  எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com  PRGI:TNTAM/25/A1018  Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01  ISSUE: 151  25.11.2025  TUESDAY  KARTHIGAI : 8  PRICE : RS.5/-
மலர் : 01  இதழ் : 151  25.11.2025  செவ்வாய்க்கிழமை  கார்த்திகை : 8  விலை : ரூ.5/–

3 இதுவரை 6.16 கோடி பேருக்கு படிவம் வழங்கப்பட்டுள்ளது: தலைமை தேர்தல் அதிகாரி பேட்டி

4 சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக துரோகம் செய்கிறது - அன்புமணி

2 "எல்லோருக்கும் வீடு, இருசக்கர வாகனம், கார்..." - தவெக லட்சியத்தை அடுக்கிய விஜய்

# நெல்லின் ஈரப்பதத்தை 22% ஆக உயர்த்த மத்திய அரசிடம் எடப்பாடி பழனிசாமி சொல்வாரா? ஸ்டாலின் கேள்வி

சென்னை: நவ.25-

தமிழ்நாட்டு சுயமரியாதையையும் உரிமைகளையும் அடகு வைக்க மட்டும்தான் கூட்டணி என்று பழனிசாமி நினைக்கிறாரா? என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "டெல்டா விவசாயிகளின் கண்ணீர் துடைக்கத் துணை நிற்காமல், நீலிக்கண்ணீர் வடித்த பச்சைத் துரோகிகள் எங்கே? நீர்நிலைகள் நிறைந்து, விவசாயிகள் கடும் உழைப்பைச் செலுத்தி நெடுவயல் நிறையக் கண்டபோது, கொள்முதல் நிலையங்களை அதிகரித்து நாம் காத்திருந்தோம். ஆனால், அதிகப்படியான மழைப்பொழிவால், நெல்மணிகள் ஈரமாயின.





உடனே, "சாகுபடிக் காலத்திற்கு முன்னதாகவே ஏன் அறுவடை செய்யவில்லை?" என்றெல்லாம் அதிமேதாவித்தன அரசியல் செய்தார், பச்சைத்துண்டு போட்டு பச்சைத் துரோகம் செய்தவரான எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி.

நெல்லின் ஈரப்பதத்தை 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பிரதமர் மோடிக்கு நான் கடிதம் எழுதினேன்.

அந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது. இதோ, கழனியில் பாடுபட்ட விவசாயிகள் களத்தில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

போராடும் எங்களுக்குத் துணைநிற்க யாரிடம் அனுமதி பெற வேண்டும் என பழனிசாமி காத்திருக்கிறார்? கூட்டணி அமைத்தால், அதனால் தமிழ்நாட்டுக்கு நன்மைகளைப் பெற்றுத்தர வேண்டும். சுயமரியாதையையும் உரிமைகளையும் அடகு வைக்க மட்டும்தான் கூட்டணி என்று பழனிசாமி நினைக்கிறாரா?

மூன்று வேளாண் சட்டங்களை மண்டி போட்டு ஆதரித்த பழனிசாமி, ஒருமுறையாவது தலையைச் சற்று நிமிர்த்தி நமது விவசாயிகளின் கோரிக்கைகளைக் கேட்கச் சொல்லியாவது சொல்வாரா?

விவசாயிகள் நலன் காக்கத் தமிழ்நாடு ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும் என்பதால்தான் இத்தனையும் கேட்கிறேன். இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி விவசாயிகள் உழைத்த உழைப்பு வீணாகக் கூடாது!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவிடம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முனைவர் பட்டம் பெற்றதற்காக நேரில் சந்தித்து வாழ்த்துகளை பெற்ற காட்சி.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

# திருப்பூர் மாவட்ட அமராவதி அணை பகுதியில் தூய்மை பணி முகாம் : பிளாஸ்டிக் விழிப்புணர்வு நிகழ்ச்சி

உடுமலை. நவ.25

திருப்பூர் மாவட்டத்தில் முக்கிய சுற்றுலாத்தலமான அமராவதி அணை உள்ளது. இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அமராவதி அணையில் உள்ள அணை பூங்கா பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகிறது. எனவே சுற்றுலாத்துறை சார்பாக அமராவதி அணை சுற்றுலாத்தலத்தை மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அமராவதி அணை சுற்றுலாத் தளத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை, நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் , உடுமலை சுற்றுச்சூழல் சங்கம்,



ரோட்டரி சங்கம், அரிமா சங்கம் மற்றும் பிரியா நர்சிங் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகள், சங்கங்கள் மற்றும் அமைப்புகள் இணைந்து சிறப்பு தூய்மை பணி முகாம் நடத்தப்பட்டது.

மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த் குமார் தூய்மை பணி முகாமில் கலந்து கொண்டார்.

இந்த முகாமில் அமராவதி அணை பூங்காவில் இருந்து 139 கிலோ பிளாஸ்டிக் குப்பைகள் எடுக்கப்பட்டது.

மேலும், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை விழிப்புணர்வு தொடர்பாக, மாவட்ட சுற்றுலா அலுவலர் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தார். கலந்து கொண்டவர்கள் அனைவரும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை பயன்படுத்த மாட்டோம் என்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பிளாஸ்டிக் பை பயன்படுத்துவதை நிறுத்தி மஞ்சப்பை பயன்படுத்துவோம் என்று கூறி அனைவருக்கும் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் உள்ள மஞ்சப்பை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நீர்வளத்துறை உதவி பொறியாளர் இந்திர பிரசாத், மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு குழு சுற்றுலா ஆர்வலர்கள் நாகராஜ் ,சத்யம் பாபு, பிரசாந்த் ,உடுமலை சுற்றுச்சூழல் சங்க நிர்வாகிகள், பிரியா நர்சிங் கல்லூரி மாணவ மாணவிகள், மலைவாழ் மக்கள் , தூய்மை காவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சமூக சேவகர் மூர்த்தி நிகழ்ச்சி ஒருங்கிணைத்தார்.

# மது பாட்டில்களை திரும்ப பெற வேறு ஆட்களை நியமிக்க வலியுறுத்தி திருச்சி மண்டல மேலாளர் அலுவலகம் டாஸ்மாக் பணியாளர்கள் முற்றுகை பரபரப்பு

திருச்சி, நவ.25

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புப்படி தமிழகத்தில் மது பிரியர்கள் டாஸ்மாக் கடைகளில் திரும்ப வழங்கும் ஒரு பாட்டிலுக்கு ரூ. 10 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நாளை முதல் திருச்சி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட உள்ளதாக டாஸ்மார்க் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த டாஸ்மாக் சூப்பர்வைசர்கள், விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர்கள் என 300 க்கும் மேற்பட்டோர் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள டாஸ்மாக் மண்டல மேலாளர் அலுவலக அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அதில்

மது பாட்டில்களை



திரும்பப்பெறும் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

ஏற்கனவே டாஸ்மாக் பணியாளர்கள் ஆள்பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் பனிச்சுமையில் உள்ளனர். இதனால் பாட்டில்களை திரும்ப பெற்று அதை முறையாக எங்கு அடுக்கி வைப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு குழப்பங்கள் உள்ளன. மேலும் ஒரு மதுபான கடையில் வாங்கும் மது பாட்டிலை அதே கடையில் கொடுத்தால் தான் திரும்ப பணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதை மதுபான பிரியர்கள் சரிவர கடைபிடிப்பார்களா என சந்தேகம் உள்ளது.

ஆகவே மது பாட்டில்களை திரும்ப பெறுவதற்கு வேறு ஆட்களை நியமிக்க வேண்டும். மது பாட்டில்களை வைப்பதற்கு என்று ஒரு தனி இடமும் ஏற்பாடு செய்து தர வேண்டும் என கூறியிருந்தனர்.

# “எல்லோருக்கும் வீடு, இருசக்கர வாகனம், கார்…” - தவெக லட்சியத்தை அடுக்கிய விஜய்

சென்னை, நவ.25-

‘‘மக்களிடமிருந்து ஓட்டு வாங்கப்போகும் நாங்கள் தற்குறிகள் என்றால், மக்களிடமிருந்து ஏற்கெனவே ஓட்டு வாங்கிய நீங்கள் யார்? என்று திமுகவுக்கு விஜய் ஆவேச மாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, ஏற்கெனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த 2 ஆயிரம் பேருக்கு கியூ ஆர் குறியீட்டுடன் கூடிய அனுமதி அட்டையும் வழங்கப்பட்டிருந்தது. அந்தவகையில், அனுமதி அட்டையுடன் வருகை தந்தவர்கள் மட்டும் நிகழ்ச்சி அரங்குக்குள் அனுமதிக் கப்பட்டனர்.

கரூர் சம்பவத்துக்கு பிறகு நடைபெறும் முதல் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி என்பதால், தொண்டர்கள், ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. இதனால், நிகழ்ச்சி நடைபெறும் பகுதிக்கு அருகே ஏராளமான ரசிகர்களும், தொண் டர்களும் திரண்டிருந்தனர். தவெகவில் தன்னார்வலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தொண்டர் படையினர் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் கூட்டத்தை வழிநடத்தினர். குறைந்த அளவிலான போலீஸாரே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டாலும், கட்சி சார்பில் கடும் கட்டுப்பாடுகளுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

காலை 11 மணி அளவில் விஜய் அரங்குக்கு வந்தார். அப்போது, அவர் பேசியதாவது: காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பிறந்த மாவட்டம். தன்னுடைய வழிகாட்டி என்பதாலேயே, தான் ஆரம்பித்த கட்சியின் கொடியில் அண்ணாவை வைத்தவர் எம்.ஜி.ஆர். ஆனால், அண்ணா ஆரம்பித்த கட்சியை, அதன்பிறகு கைப்பற்றியவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள் என்று, நான் சொல்லி தான் உங்களுக்கு தெரியவேண்டியதில்லை. தனிப்பட்ட முறையில் எங்களுக்கும், அவர்களுக்கும் (திமுகவுக்கும்) எந்த பிரச்சினையும் கிடையாது.

அவர்கள் வேண்டுமானால், நம்மீது வன்மத்தோடு இருக்கலாம். ஆனால், நாம் அப்படி இருக்கபோவதில்லை. உங்களை, என்னை, நம் எல்லாரையும் பொய் சொல்லி, நம்ப வைத்து, ஏமாற்றி,ஆட்சிக்கு வந்து நல்லது செய்வதுபோல் அவர்கள் நடித்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எப்படி நாம் கேள்வி கேட்காமல் இருக்கமுடியும்.

கொள்கை என்றால், அது கிலோ எவ்வளவு? என்ன விலை என கேட்கும் அளவுக்கு ஒரு கட்சியை நடத்திக் கொண்டு இருக்கும், தமிழக முதல்வர், நமக்கு கொள்கை இல்லை என்கிறார். கொள்கையை வெறும் பேச்சில் மட்டும் பேசிக் கொண்டு, எல்லா கொள்கையையுமே அதளபாதாளத்தில் புதைத்துவிட்டு, ஏதோ கொள்கைளை அவர்கள் தான் குத்தகைக்கு எடுத்தது போல பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் கொள்கையே கொள்ளை தான். ‘பாப்பா… பவள விழா பாப்பா…நீ பாசாங்கு காட்டாதே பாப்பா… நீ நல்லவர் போல் நடிப்பதை பார்த்து நாடே…’,(கையால் வாயை மூடிக்கொண்டார்). பாப்பா என்பதை மிகவும் ஆசையாய், பாசமாய், மென்மையாக தான் கூறினேன்.



அதை நீங்கள் அதிர்ச்சியாக எடுத்துக் கொண்டாலும், விமர்சனமாய் நினைத்தாலும் நான் ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் நாங்கள் விமர்சனம் செய்யவே தொடங்கவில்லை. அதற்குள் அலறினால் எப்படி? காஞ்சிபுரம் மண்ணை வாழ வைக்கிற ஜீவநதியான பாலாற்றை பெரியார், அண்ணா பெயரை, சும்மா பெயருக்கு வைத்து கொண்டு ஆட்சி நடத்துகிறவர்கள் சுரண்டிவிட்டார்கள். கொள்ளையடித்து விட்டார்கள்.

அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டி 22 லட்சத்து 70 ஆயிரம் யூனிட் மணலை கொள்ளை அடித்திருக்கிறார்கள். அந்தவகையில் ரூ.4,730 கோடி கொள்ளை அடித்திருக்கிறார்கள். மேலிருந்து கீழ் வரை, ஒரு கட்சியே சிண்டிகேட் போட்டு கொள்ளை அடிப்பதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அரசியல் எதிரி, கொள்கை எதிரி யார் என தெளிவாக சொல்லிவிட்டு தான் களத்துக்கு வந்திருக்கிறோம். அதில் எந்தவித குழப்பமும், ஊசலாட்டமும் இருக்கபோவது கிடையாது. இந்த விஜய், ‘சும்மா எதையும் சொல்லமாட்டான், சொல்லிட்டா அதை செய்யாம விடமாட்டான்’.

அதென்ன தற்குறி… தவெகவுக்கு ஆதரவு கொடுக்கிற கோடிக்கணக்கான மக்கள், நண்பா, நண்பிகள், ஜென்ஸி கிட்ஸ் எல்லோரையும் தற்குறிகள் என சொல்லிவிட்டு, இப்போது அப்படி சொல்ல வேண்டாம் என்கிறார்கள். சமீபத்தில் அவர்கள் நடத்திய அறிவுத்திருவிழா… மன்னிக்கவும், அவதூறு திருவிழாவில், பேசிய அந்த கட்சியை சேர்ந்த எம்எல்ஏ, தவெகவுக்கு ஆதரவாக பேசியுள்ளார். இந்த ஆதரவுக் குரல் இனி எல்லா வீட்டிலும் எதிரொலிக்கும்.

எம்ஜிஆர் கட்சி ஆரம்பித்தபோது அந்தக் கட்சியை கூத்தாடி கட்சி என்றார்கள். பின்னர், அவரை விமர்சித்தவர்கள் எல்லோரும், அதே கட்சியில் போய் சேர்ந்தார்கள். இப்போதும் நம்மை அப்படி தான் சொல்கிறார்கள். மர்மயோகி என்ற படத்தில், ‘குறிவைத்தால் தவறமாட்டேன். தவறுமானால் குறியே வைக்க மாட்டேன்’, என எம்.ஜி.ஆர். வசனம் பேசியிருப்பார். இது புரிய வேண்டியவர்களுக்கு புரியும் என நினைக்கிறேன்.

ஏன் இந்த விஜய்யை தொட்டோம், ஏன் இந்த விஜய்யுடன் இருக்கும் மக்களை தொட்டோம் என நினைத்து வருத்தப்பட போகிறீர்கள். மக்கள் எல்லோரும் உங்களுக்கு தற்குறிகளா? மக்களிடம் இருந்து ஓட்டு வாங்க போகும் நாங்கள் தற்குறிகள் என்றால், அதே மக்களிடம் இருந்து தானே இத்தனை நாட்களாக நீங்கள் ஓட்டு வாங்கி கொண்டிருந்தீர்கள். அப்படியென்றால் நீங்கள் யார்? மக்களுக்கு நீங்கள் காட்டும் நன்றியும், மரியாதையும் இதுதானா?

இந்த தற்குறிகள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து தான், வாழ்நாள் முழுவதும், விடையே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு உங்களது அரசியலை கேள்விக்குறியாக்க போகிறார்கள். இவர்கள் தற்குறிகள் கிடையாது. இவர்கள் தமிழக அரசியலின் ஆச்சரியக் குறி. மாற்றத்துக்கான அறிகுறி. லாஜிக்கே இல்லாமல், தற்குறி, தற்குறி என சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே தவெகவுக்கும், திமுகவுக்கும் இடையே தான் போட்டி. ‘மை டியர் அங்கிள்’, (ஸ்டாலினை இப்படி குறிப்பிட்டார்) இதை ஏற்கெனவே மக்கள் முடிவு செய்து விட்டார்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.

எல்லோருக்கும் வீடு, இருசக்கர வாகனம்: மக்களால், அமைக்கப்பட இருக்கும் நம் ஆட்சியில், நாம் என்ன செய்ய போகிறோம் என்பதை தேர்தல் அறிக்கையில் நிச்சயம் சொல்லுவோம். அதற்கு முன்பு அதைப்பற்றி கொஞ்சம் சொல்கிறேன். எல்லோருக்கும் நிரந்தரமான வீடு. வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம். கார் என்பது லட்சியம். அதற்கான வசதி வாய்ப்புகளை உருவாக்கும் அளவுக்கு பொருளாதார வளர்ச்சிக்கு வழியை உண்டாக்குவோம். வீட்டுக்கு ஒருவர் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். வீட்டுக்கு ஒருவருக்கு நிரந்தர வருமானம் கிடைக்க வேண்டும். அதற்கான வேலை வாய்ப்பை உருவாக்குவோம். அதற்கேற்ற வகையில், கல்வியில், பாடத்திட்டத்தில் சீர்த்திருத்தம் செய்வோம்.

தரமான அரசு மருத்துவமனைகள், பருவ மழை காலத்தில் ஊரும், மக்களும், விவசாயமும் பாதிக்கப்படாமல் இருக்க திட்டத்தை உருவாக்குவோம். மீனவர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்து கேட்டு அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவோம். முக்கியமாக தொழிற்துறை வளர்ச்சியில் கவனம் செலுத்துவோம். எல்லாவற்றையும் விட முக்கியம். சட்டம் ஒழுங்கை மிகவும் கட்டுப்பாட்டில் வைத்திருப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர். நிர்மல்குமார், அருண்ராஜ் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சென்னை எழும்பூர் ராமேசுவரம் வந்தே பாரத் ரயில் சேவை: அடுத்த மாதம் பிரதமர் தொடங்கி வைப்பார் என எதிர்பார்ப்பு

சென்னை, நவ.25-

சென்னை எழும்பூர் ராமேசுவரம் இடையே வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் மோடி அடுத்த மாதம் தொடங்கி வைப்பார் என எதிர்பார்க் கப்படுகிறது.



தெற்கு ரயில்வேயில் சென்னை சென்ட்ரல் மைசூரு, சென்னை சென்ட்ரல் கோவை, சென்னை சென்ட்ரல் விஜயவாடா, எழும்பூர் திருநெல்வேலி, எழும்பூர் நாகர்கோவில் வந்தே பாரத் ரயில் உட்பட 10க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்கள் இயக்கப் படுகின்றன. மற்ற விரைவு ரயில்களை காட்டிலும் வந்தே பாரத் ரயில் வேகமாகவும், சொகுசாகவும் இருப்பதால், பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

மேலும், பல வழித் தடங்களில் வந்தே பாரத் ரயில்களை இயக்க வலியுறுத்தி, ரயில்வே அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அந்த வகையில், எழும்பூர் ராமேசுவரம் இடையே வந்தே பாரத் ரயில் இயக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்துகளின் புனித தலமான ராமேசுவரத்தில் உள்ள ராமநாத சுவாமி கோயிலுக்கு வெளி மாநிலங்களில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் வந்து செல்வதால், அவர்களின் போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் வகையில் வந்தே பாரத் ரயில் இயக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

இதன்பேரில், சென்னை எழும்பூர் ராமேசுவரம் வழித்தடத்தில் வந்தே பாரத் ரயில் இயக்க ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது. இந்த வந்தே பாரத் ரயிலுக்கான தற்காலிக நேர அட்டவணையை ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இந்த ரயில் வாரத்தில் புதன்கிழமை தவிர 6 நாட்கள் இயக்கப்பட உள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து அதிகாலை 5.30 மணிக்குப் புறப்பட்டு, திருச்சி, காரைக்குடி வழியாக ராமேசுவரத்தை அதே நாள் மதியம் 1.15 மணிக்கு அடையும். இந்த ரயில் தாம்பரத்தில் அதிகாலை 5.50 மணிக்கும், விழுப்புரம் சந்திப்பில் காலை 7.18 மணிக்கும், திருச்சி சந்திப்பில் காலை 9.15 மணிக்கும், புதுக்கோட்டையில் காலை 9.58 மணிக்கும், காரைக்குடி சந்திப்பில் காலை 10.38 மணிக்கும், சிவகங்கையில் முற்பகல் 11.13 மணிக்கும், ராமநாதபுரத்தில் நண்பகல் 12.13 மணிக்கும் நின்றுசெல்லும்.

மறுமார்க்கமாக ராமேசுவரத்தில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டு அதேநாள் இரவு 10.20 மணிக்கு சென்னை எழும்பூரை வந்தடையும். இந்த ரயில் ராமநாதபுரத்தில் பிற்பகல் 3.13 மணிக்கும், சிவகங்கையில் மாலை 4.08 மணிக்கும், காரைக்குடி சந்திப்பில் மாலை 4.38 மணிக்கும், புதுக்கோட்டையில் மாலை 5.08 மணிக்கும், திருச்சி சந்திப்பில் மாலை 6.05மணிக்கும், விழுப்புரம் சந்திப்பில்இரவு 8.13 மணிக்கும் நின்று செல்லும். இந்த ரயில் சேவையை பிரதமர் மோடி அடுத்த மாதம் மத்தியில் அல்லது இறுதியில் திறந்து வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எஸ்ஐஆர் பணிகள் குறித்து பழனிசாமியுடன் ஆலோசனை: கே.பி.ராமலிங்கம் தகவல்

சேலம், நவ.25-

சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் இல்லத்தில் அவரை பாஜக மாநில துணை தலைவர் கே.பி. ராமலிங்கம் நேற்று சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கே.பி.ராமலிங்கம் கூறியதாவது: தாம்பரம் பகுதியில் ஒரே வீட்டில் 150 ஓட்டுகள், மற்றொரு வீட்டில் 161 ஓட்டுகள் என வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருப்பது தெரியவந்துள்ளது. எஸ்ஐஆர் பணியின் அவசியத்தை தற்போது மக்கள் உணர்ந்துள்ளனர். 20 ஆண்டுகளுக்கு பிறகு நடக்கும் எஸ்ஐஆர் பணி மூலம் புலம்பெயர்ந்தவர்களின் பெயர்கள், உயிரிழந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதை தடுக்க முடியும்.

எஸ்ஐஆர் பணியே கூடாது என முதல்வர் ஸ்டாலின் மற்றும் திமுக கூட்டணி கட்சிகள் குறை கூறி வருகின்றனர். மறுபக்கம் எஸ்ஐஆர் பணி மேற்கொள்ளும் தேர்தல் அலுவலர்களை மிரட்டியும், அழுத்தம் கொடுத்தும் உயிரிழந்தவர்களின் பெயர்களை மீண்டும் சேர்க்க முயற்சி செய்து வருகின்றனர். ஆளுங்கட்சியினர் மற்றும் உயர் அலுவலர்களின் அழுத்தத்துக்கு பணிந்து தேர்தல் அலுவலர்கள் யாரேனும் தவறு செய்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்துவோம்.

பிஹார் தேர்தலில் தோல்விக்கு முன்பே காங்கிரஸ் கூட்டணி கட்சிகள் எஸ்ஐஆர்ஐ குறை கூறின. அதைப்போல, வரும் தேர்தலில் திமுகவை மக்கள் புறக்கணிக்க முடிவெடுத்து விட்டதை முன்கூட்டியே தெரிந்து கொண்ட முதல்வர் எஸ்ஐஆர்ஐ தொடர்ந்து குறை கூறி வருகிறார். பாஜக மற்றும் அதிமுகவினர் எஸ்ஐஆர் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியிடம் ஆலோசனை நடத்திவிட்டு வந்துள்ளேன். இரண்டு கட்சியினரும் ஒருங்கிணைந்து தங்களது பணிகளை மேற்கொள்வார்கள்.

முன்பு பாஜகவுடன் கூட்டணி வைத்து மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த திமுக அப்போது, எல்லா வசதிகளையும் அனுபவித்து விட்டு, தற்போது அதிமுக பொதுச்செயலாளரை அடிமை என குறை கூறுவது சரியல்ல. அதிமுக எங்களோடு நல்ல தோழமையோடு, உரிமையோடு, இணக்கமாக செயல்பட்டு வருகிறது. திமுக எனும் தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதற்காக பாஜகஅதிமுக இணைந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.



# புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இடதுசாரி, விசிக கட்சிகள் டிச.8ல் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.25-

மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள 4 புதிய தொழிலாளர் தொகுப்பு சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் வரும் டிச.8ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், விசிக தலைவர் திருமாவளவன், சிபிஐ (எம்.எல்) லிபரேசன் மாநில செயலாளர் ஆசைத்தம்பி ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கை: தொழிலாளர்களின் ஊதிய பாதுகாப்பு, வேலை பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு என அனைத்துமே கேள்விக்குள்ளாக்குகிற வகையில் தொழிலுறவு சட்டத்தொகுப்பு 2020, சம்பளத் தொகுப்பு 2019, பணித்தலப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத்தொகுப்பு 2020, சமூக பாதுகாப்பு தொகுப்பு 2020 ஆகிய சட்டங்களை கொண்டு வந்த மத்திய அரசு அதை நடைமுறைப்படுத்த நிர்வாக ரீதியிலான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த சட்டங்கள் கார்ப்பரேட் இந்துத்துவ கூட்டணியின் வெளிப்பாடாடே ஆகும். இவை முதலாளிகளுக்கு கட்டற்ற அதிகாரத்தை தருகின்றன. இதில் 100 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால் ஆலை மூடலுக்கு அனுமதி தேவை என்றிருந்த நிலை 300 தொழிலாளர்கள் என மாற்றப்பட்டிருப்பது தொழிலாளர்களை சட்டப் பாதுகாப்பில் இருந்து வெளியே வீசி எறிவதே ஆகும். நிரந்தர நியமனங்களை காலி செய்து கூலி முறைமையை அரங்கேற்றுகிற ஏற்பாடு.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்கு குறைந்தபட்ச உத்தரவாதம் கூட இல்லை. நூற்று ஐம்பது ஆண்டுகால தொழிலாளர் போராட்டங்கள் ஈட்டித் தந்த உரிமைகளை முற்றிலுமாக நீர்த்துப் போகச்செய்யும் தொகுப்பு சட்டங்கள் ஏற்கத்தக்கதல்ல. அவை வன்மையான கண்டனத்துக்குரியது.

எனவே தொழிலாளர் தொகுப்புச் சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில்இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி,சிபிஐ (எம்எல்) லிபரேசன், விசிக கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் வரும் டிச.8ம் தேதி நடைபெறும். இவ்வாறு அதில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக மக்களை தேர்தல் ஆணையம் தோற்கடிக்க விடமாட்டோம்: காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் சொல்கிறார்

சென்னை, நவ.25-

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி தொடர்பாக திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்த, காங்கிரஸ் மேலிட பார்வையாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை கட்சித் தலைமை நியமித்துள்ளது.

அதில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார், அகில இந்திய செயலாளர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் ஆல்வா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக காங்கிரஸின் தற்போதைய நிலை, பலம் மற்றும் பலவீனம், கட்சியை வளர்க்க என்ன செய்ய வேண்டும், தமிழகத்தில் காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள், நமது பலத்துக்கு திமுகவிடம் எத்தனை தொகுதிகள் கேட்கலாம் என்பன உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐவர் குழு தனியாக ஆலோசனை நடத்தியது. பின்னர், குழுவின் தலைவர் கிரிஷ் சோடங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த கூட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் களுடன் கலந்துரையாடினோம்.



வாக்குத் திருட்டுக்கு எதிராக தமிழ்நாடு காங்கிரஸ் நடத்திய கையெழுத்து இயக்கத்தில் 1 கோடியே 14 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன. காங்கிரஸ் நிர்வாகிகளும் தொண்டர்களும் இதில் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். தமிழகத்தில் காங்கிரஸ் சிறப்பாகவே மக்கள் பணியாற்றி வருகிறது.

இக்கூட்டத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தலை எப்படி எதிர்கொள்வது, கூட்டணி கட்சிகளை எப்படி அணுகுவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பிஹார் தேர்தலில் பாஜக கூட்டணி எப்படி வெற்றி பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த வெற்றி தேர்தல் ஆணையத்தால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டது. அந்த தேர்தலில் தேர்தல் ஆணையம் பிஹார் மக்களை தோற்கடித்துள்ளது. அதேபோல தமிழகத்தில் நடக்க விடமாட்டோம். தமிழக மக்களை தேர்தல் ஆணையம் தோற்கடிக்க விடமாட்டோம்.இவ்வாறு அவர் கூறினார்.



■ நீலகிரி மாவட்டம் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோகத்தொரை பகுதியில் பூர்த்தி செய்த கணக்கீட்டு படிவங்கள் திரும்ப பெறும் பணியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபட்டனர்.



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.




■ மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரண வரே அவர்கள் ஆந்திர பிரதேசம் மாநிலம் ஶ்ரீஹரி கோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையம் ISRO விற்கு, திருப்பூர் மாவட்டத்தில் இருந்து கல்வி வெளிப்பாடு பயணமாக, பள்ளி மாணவ மாணவிகள் செல்லும் பேருந்தை கொடியைசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆபுனிதா அந்தோணியம்மாள் மாவட்ட கல்வி அலுவலர் காளிமுத்து.



# அரசியல் சமூகம் பண்பாடு பொருளாதாரம் உருவான காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு எனும் நூலை கம்பம் MLA வெளியிட்டார்

தேனி, நவ.25-

தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக, ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்களுக்கு அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம் இவைகளை உள்ளடக்கிய இளம் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியில் உருவான காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு எனும் நூல் இளைஞர் அணி பேரூர் ஒன்றிய அமைப்பாளருக்கு வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலாளர் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் தலைமையிலும், இளைஞர் அணி தெற்கு மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயாநிதி ஸ்டாலின் உத்தரவு படியும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா, தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளர் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப் பாளர்கள் சுகுமாரன் பிரபாகரன் அபுதாகிர் வி.கே. முருகன், ஸ்டிபன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த விழாவில் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பேரூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்களும் கம்பம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு அமைப்பாளருக்கும் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு எனும் நூலினை வழங்கி வரக்கூடிய 2026 சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து கழகத்தின் வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். தொடர்ந்து திமுக அரசின் வரலாற்றை ஒவ்வொரு இளைஞர்களும் தெரிந்து கொண்டு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

இந்த காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்னும் நூல் வழங்கும் விழாவில் கம்பம் நகரச் செயலாளர்கள் வீரபாண்டியன், பால்பாண்டி ராஜா கலந்து கொண்டனர் தொடர்ந்து தேனி தெற்கு மாவட்ட ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்ற நூலை பெற்றுக்கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம் காமராஜர் பேருந்து நிலையத்தில், மூன்று இலவச மகளிர் விடியல் பேருந்தை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் கொ டியசைத்து துவங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் துணை மேயர் ராஜப்பா அவர்கள் உடன் இருந்தனர்.

# இதுவரை 6.16 கோடி பேருக்கு படிவம் வழங்கப்பட்டுள்ளது: தலைமை தேர்தல் அதிகாரி பேட்டி

சென்னை, நவ.25-

இதுவரை 6.16 கோடி பேருக்கு படிவம் வழங்கப்பட்டுள்ளது என தலைமை தேர்தல் அதிகாரி பேட்டியளித்துள்ளார்.

இதன்பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர்,

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு கணக்கீட்டுப் படிவம் வழங்கும் பணிகள் டிச. 4 வரை தொடரும். அனைவரும் கண்டிப்பாக படிவத்தை நிரப்பித் தர வேண்டும். முடிந்தவரை தகவல்களை நிரப்பி கொடுக்க வேண்டும்.



இதுவரை 6.16 கோடி வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. 50% படிவங்கள் நிரப்பிய நிலையில் திருப்பி பெறப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இந்த பணிகளில் 83,256 அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதில் 68,000 பேர் பிஎல்ஓக்கள். மேலும் 33,000 தன்னார்வலர்கள், 2,45,340 கட்சி ஏஜெண்டுகள் இந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் எஸ்ஐஆர் பணிகளில் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனும் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும். வரைவு பட்டியலில் இடம்பெறாதவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்க உரிய அவகாசம் சேர்க்கப்படும்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு விடுபட்டவர்கள் கண்டிப்பாக சேர்க்கப்படுவார்கள். ஆன்லைனில் படிவங்கள் பெறப்பட்டு வருகின்றன. கணக்கீட்டுப் படிவங்களில் தகவல்கள் சரியாக இருந்தால் எந்த படிவமும் நிராகரிக்கப்பட்டது. யாருடைய பெயரையும் காரணமின்றி நீக்க முடியாது. பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால் கண்டிப்பாக காரணம் தெரிவிக்கப்படும். எஸ்ஐஆர் பணிகளுக்கு கூடுதல் கால அவகாசம் வாய்ப்பில்லை" என்று பேசினார்.

# பாலமேட்டில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி, பாக பொறுப்பாளர்கள் பயிற்சி முகாம்

அலங்காநல்லூர், நவ.25-

மதுரை மாவட்டம் பாலமேடு தேவர் மஹாலில் அதிமுக சார்பில், பூத் கமிட்டி மற்றும் பாக பொறுப்பாளர்கள் பயிற்சி முகாம் ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன்,

தலைமையிலும், நகர செயலாளர் வி.கே.குமார் , சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் முன்னிலையிலும் நடைபெற்றது.

ஆர்.பி.உதயகுமார் பேசியது :

கழகப் பொதுச் செயலாளர் பழனிச்சாமி அவர்கள் தினந்தோறும் கைபேசியில் பேசி, SIR படிவம் குறித்தும், மாவட்ட கழகத்தின் சார்பில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்தும் தொடர்ந்து பேசி வருகிறார். தினந்தோறும் நாங்கள் செல்லும் இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் தினந்தோறும் தலைமை கழகத்திற்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வக்கீல் திருப்பதி, வெற்றிவேல், வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்

தமிழரசன், கருப்பையா, மாணிக்கம், எஸ்.எஸ். சரவணன், தண்டரை மனோகரன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் ஜெயச்சந்திரமணியன், மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், மாவட்ட மகளிரணி செயலாளர் லெட்சுமி, மாவட்ட மகளிரணி இணைச் செயலாளர் மருதாயிசுந்தர், அம்மா பேரவை மாவட்டத் துணைச் செயலாளர் மனோகரன், நகர பிரதிநிதி முரளி, ஒன்றிய நிர்வாகி பாண்டுரங்கன், விவசாய அணி ஆர்.பி.குமார், முத்துகிருஷ்ணன், உள்பட கலந்து கொண்டனர்.




■ திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கெடுப்பு படிவத்தினை பதிவேற்றம் செய்யும் பணிகள் தொடர்பாக ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருகில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் திரு.செந்தில்முருகன் உட்பட பலர் உள்ளனர்.



■ தேனி மாவட்டம், பூதிப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைப்பெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கினார்.




# பட்டிவீரன்பட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் தீவிரம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா ஆய்வு

## பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆலோசனை

சின்னாளபட்டி, நவ. 25-

பட்டிவீரன்பட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா அவர்கள் சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டியில் 7549 வாக்காளர்கள் உள்ளனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் உத்தரவுபடி பேரூராட்சி பணியாளர்கள் செயல் அலுவலர் கோபிநாத் தலைமையில், தீவிரமாக எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதிரடியாக பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், சிறப்பு முகாம் நடைபெறும் இடங்களுக்கு சென்று பார்வையிட்ட பின்பு, பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு, தாமதம் இல்லாமல் விண்ணப்ப படிவங்களைவிரைவாக பதிவேற்றம் செய்வது எப்படி என்பது குறித்து ஆலோசனை வழங்கினார்.

இன்னும் அதிகமாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து விரிவாக முடிக்க வேண்டும் என்றார். ஆய்வின்போது, செயல் அலுவலர் கோபிநாத் மற்றும் பேரூர்கழக செயலாளர் அருண்குமார், துப்புரவு மேற்பார்வையாளர் சரவணன், மற்றும் அலுவலக பணியாளர்கள் பலர் உடனிருந்தனர். எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் திருத்தல் பட்டியல் பணிகள் குறித்து செயல் அலுவலர் கோபிநாத் கூறுகையில், மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உத்தரவுபடி தீவிரமாக வாக்காளர் சேர்க்கை பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 53சதவீதம் வரை வாக்காளர்களை பட்டியலில் சேர்த்துள்ளோம் என்றார்.

# தாண்டிகுடி அருகே கடும் மழையினால் கார் மீது மரம் விழுந்து உயிரிழந்த மணிகண்டன் குடும்பத்திற்க்கு தமிழக முதல்வரின் நிவாரண நிதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, நவ. 25-

தாண்டிகுடி அருகே கடும் மழையினால் கார் மீது மரம் விழுந்து உயிரிழந்த மணிகண்டன் குடும்பத்திற்க்கு தமிழக முதல்வரின் நிவாரண நிதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டியை சேர்ந்த தனியார் கார் டிரைவர் மணிகண்டன்(40) கடந்த 22ம் தேதி மேற்குதொடர்ச்சிமலை பகுதி தாண்டிகுடி காவல்நிலையத்திற்கு உட்பட்ட பள்ளத்து வாய்கால் அருகே வந்த போது கடும் மழையினால் மரம் முறிந்து கார் மீது விழுந்ததால் கார்டிரைவர் மணிகண்டன் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தாண்டிகுடி காவல்நிலையத்தினர் வழக்கு பதிவு செய்து



விசாரணை செய்து வருகின்றனர். இந்நிலையில் தேவரப்பன்பட்டியில் நடைபெற்ற பூமி பூஜைக்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை ஐ.பெரியசாமி அவர்களிடம் மணிகண்டன் மனைவி மகேஸ்வரி தனக்கு நிவாரண உதவி வழங்க வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தார். மனுவை பெற்றுக்கொண்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சியர் சரவணன் அவர்களிடம் வழங்கி தமிழக முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்று இந்த குடும்பத்திற்கு நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுங்கள் என கூறினார். கோரிக்கை மனு கொடுத்தவுடன் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட அமைச்சர் பெரியசாமி அவர்களுக்கு மகேஸ்வரி கண்ணீர் மல்க நன்றிகூறினார். நிகழச்ச்யின் போது மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், மாவட்ட திட்ட அலுவலர் பெ.திலகவதி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், அவைத்தலைவர் காணிக்கைசாமி, திமுக நிர்வாகி ரெக்ஸ், வட்டாட்சியர் முத்துமுருகன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், பட்டிவீரன்பட்டி பேரூர்கழக செயலாளர் அருண்குமார், அய்யம்பாளையம் பேரூராட்சிமன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர்கழக செயலாளர் தங்கராஜ், முன்னால் மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பொருளாளர் போஸ், முன்னால் ஒன்றியகுழு உறுப்பினர் செல்வி காங்கேயன், அழகு சரவணக்குமார், ஊராட்சி செயலர்கள் சிவராஜன், கண்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.



# திருச்சானூர் பிரம்மோற்சவம் 7ம் நாள் விழா: சூரிய, சந்திர பிரபையில் பத்மாவதி தாயார் பவனி

திருப்பதி, நவ.25-

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயில் பிரம்மோற்சவ விழா கடந்த 17ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் காலை, இரவு என இரு வேளைகளிலும் தாயார் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

இந்நிலையில், 7ம் நாளான நேற்று காலை சூரிய பிரபை வாகனத்தில் யோக நாராயணி அலங்காரத்தில் எழுந்தருளினார். வாகன மண்டபத்தில் இருந்து காலை 8 மணி முதல் 10 மணி வரை 4 மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தாயாரை வழிப்பட்டனர்.


இதனை தொடர்ந்து, இரவு சந்திர பிரபை வாகனத்தில் காட்சியளித்தார். மாட வீதிகளில் பல்வேறு மாநில நடன கலைஞர்களின் நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தது. இன்று பிரம்மோற்சவத்தின் 8ம் நாளாகும். இன்று காலை தேரோட்டமும், இரவு குதிரை வாகனத்திலும் தாயார் அருள் பாலிக்க உள்ளார்.

நாளை பஞ்சமி தீர்த்த நிகழ்ச்சியோடு பிரம்மோற்சவம் நிறைவடைகிறது. திருச்சானூர் பத்மாவதி தாயார் அவதரித்த தாமரை தடாக குளத்தில் நாளை தாயார், சக்கரத் தாழ்வாருக்கு சிறப்பு திருமஞ்சன சேவை நடைபெற உள்ளது. நாளை மதியம் 12 மணிக்கு புனித பஞ்சமி தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# கியூஆர் கோடு, புகைப்படத்துடன் புதிய ஆதார் அட்டை

புதுடெல்லி, நவ.25-

ஆதார் அட்டை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க வரும் டிசம்பரில் புதிய விதிகளை அமல்படுத்த இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) திட்டமிட்டுள்ளது. இதன்படி வருங்காலத்தில் ஆதார் அட்டையில் புகைப்படம், கியூஆர் கோடு மட்டுமே இடம்பெறும்.




இதுகுறித்து, யுஐடிஏஐ தலைமை செயல் அதிகாரி புவனேஷ் குமார் அண்மையில் ஆன்லைன் மூலம் நடைபெற்ற கருத்தரங்கில் கூறியதாவது: அரசு, தனியார் நிறுவனங்கள் சார்பில் பல்வேறு பணிகளுக்காக பொதுமக்களிடம் ஆதார் அட்டை நகல்கள் கோரப்படுகிறது. இதன்மூலம் தனிநபர், நிறுவனங்களுக்கு பொதுமக்களின் ஆதார் விவரங்கள் கிடைக்கின்றன. குறிப்பாக ஓட்டல்கள், மொபைல் போன் சிம் விற்பனையாளர்கள், கருத்தரங்குகளை நடத்துவோருக்கு ஆதார் விவரங்கள் கிடைக்கின்றன. இதை சிலர் தவறாக பயன்படுத்தி ஆன்லைன் மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆதார் அட்டை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க வரும் டிசம்பரில் புதிய விதிகள், மாற்றங்களை அமல்படுத்த திட்டமிட்டு உள்ளோம். முதல்கட்டமாக ஆதார் செயலி அறிமுகம் செய்யப்பட உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள எம்ஆதாருக்கு பதிலாக புதிய செயலி அறிமுகம் செய்யப்படும். இதன்மூலம் எந்தவொரு இடத்திலும் பொதுமக்கள் ஆதார் நகலை கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆதார் செயலி வாயிலாக டிஜிட்டல் முறையில் தகவல்களை அளிக்க முடியும்.

அடுத்த கட்டமாக ஆதார் அட்டையில் புகைப்படம் மற்றும் கியூஆர் கோடு மட்டுமே அச்சிட்டு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். குறிப்பாக 12 இலக்க எண் ஆதார் அட்டையில் அச்சிடப்படாது. எனினும் அட்டைதாரரின் பெயர் இடம்பெற வாய்ப்பிருக்கிறது. ஆனால் நிச்சயமாக முகவரி இடம்பெறாது. பிரத்யேக செயலி அல்லது யுஐடிஏஐ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கருவியால் மட்டுமே கியூஆர் கோடை ஸ்கேன் செய்து தகவல்களை பெற முடியும். இதன்மூலம் மோசடிகள் முழுமையாக தடுக்கப்படும் .இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# செங்கோட்டையனின் கோட்டையில் நவ.30ல் ‘மாஸ்’ காட்ட பழனிசாமி திட்டம்

சென்னை, நவ.25-

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையனின் கோட்டையான கோபிசெட்டிபாளையத்தில் நவ.30ம் தேதி பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தை நடத்த கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டமிட்டுள்ளார்.



அதிமுக ஒருங்கிணைப்பு குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், டிடிவி தினகரன், சசிகலா போன்றோர் குரல் கொடுத்து வந்தாலும், அதற்கு வாய்ப்பே இல்லை என பழனிசாமி கூறி வருகிறார். கட்சி ஒருங்கிணைப்பு என்பது உட்கட்சி விவகாரம். அதில் தலையிடமாட்டோம் என பாஜகவும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துவிட்டது.

ஆனால் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் அதிமுக ஒன்றிணைந்தால் நல்லது என சொல்லி வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், கட்சி ஒன்றிணைப்பை வலியுறுத்தி, பழனிசாமிக்கு காலக்கெடு விதித்த அதிமுக முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், ஓ.பன்னீர்செல்வம், டிடிவி தினகரனை சந்தித்த நிலையில், கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

கட்சியில் இருந்த எம்ஜிஆர் காலத்து மூத்த அரசியல்வாதி அவர் மட்டும் தான். அவரை நீக்கினால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் என அதிமுக கூட்டணி கட்சிகளும், அதிமுக தொண்டர்களும் கருதக்கூடும். அதனால் செங்கோட்டையனின் கோட்டையான ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் யாருக்கு பலம் என்பதை நிரூபிக்கும் வகையில் வரும் நவ.30ம் தேதி அங்கு பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தை பழனிசாமி நடத்த திட்டமிட்டுள்ளார்.

பழனிசாமி கடந்த ஜூலை மாதம் முதல் மேற்கொண்டு வரும் ‘மக்களை காப்போம்: தமிழகத்தை மீட்போம்’ சுற்றுப்பயணத்தின் தொடர்ச்சியாக இந்த பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அதிமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பழனிசாமி மேற்கொண்டு வரும், ‘மக்களை காப்போம்: தமிழகத்தை மீட்போம்’ சுற்றுப்பயணத்தில் இதுவரை 5 கட்டங்களாக 174 தொகுதிகளில் கலந்துகொண்டு சுமார் 11 ஆயிரம் கிமீ சுற்றுப்பயணம் செய்திருப்பதாக அதிமுகவினர் தெரிவித்துள்ளனர். டிச.10ம் தேதிநடைபெறும் அதிமுக பொதுக்குழு கூட்டத்துக்கு பிறகு சுற்றுப்பயணத்தை மீண்டும் தீவிரப்படுத்த பழனிசாமி திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக துரோகம் செய்கிறது - அன்புமணி

சென்னை, நவ.25-

“சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக அரசு துரோகம் செய்கிறது. உச்சநீதிமன்றம் ஆணையிட்டு ஓராண்டாகியும் உள் இட ஒதுக்கீடு வழங்க மறுப்பது ஏன்?” என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தியாவில் பட்டியலின மக்களில் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள் தொடர்ந்து அதே நிலையிலேயே இருக்கிறார்கள்.

அவர்களின் நிலையை முன்னேற்றவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் பயன்களை அவர்கள் வென்றெடுக்கவும் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நீதியரசர் பி.ஆர்.கவாய் கூறியிருக்கிறார்.

இது தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பை பெரும்பாலான மாநிலங்கள் செயல்படுத்தியுள்ள நிலையில், அத்தீர்ப்பை திமுக அரசு சற்றும் மதிக்காதது கண்டிக்கத்தக்கது.

தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையொட்டி ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்திருக்கும் நீதியரசர் கவாய், சமூக, கல்வி, பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையை அடிப்படையாகக் கொண்டு பட்டியலின மக்களுக்கு சமூகநீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற தீர்ப்பை தாம் இடம்பெற்றிருந்த 7 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கடந்த ஆண்டு அளித்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அந்தத் தீர்ப்பின் நோக்கங்களை திமுக அரசு நிறைவேற்றவில்லை. பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று கடந்த



ஆண்டு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், முதல் மாநிலமாக தெலங்கானா, கடந்த மார்ச் மாதம் பட்டியலினத்தவருக்கான 15% இட ஒதுக்கீட்டை முறையே 1%, 9%, 5% என 3 பிரிவுகளாக பிரித்து சட்டம் இயற்றியது. அதேபோல், கர்நாடகத்தில் பட்டியலின சமூகத்தினருக்கு வழங்கப்பட்டு வரும் 17% இட ஒதுக்கீட்டை பட்டியலினம் (வலது) 6%, பட்டியலினம் (இடது) 6%, பிற பட்டியலினத்தவருக்கு 5% என 3 பிரிவுகளாக உள் இட ஒதுக்கீடு வழங்கி அம்மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

ஆந்திராவும் பட்டியலின மக்களுக்கான 15% இட ஒதுக்கீட்டை முறையே 6.5%, 7.5%, 1% என 3 பிரிவுகளாக பிரித்து உள் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியின் வலியுறுத்தலைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டில் அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட உள் இட ஒதுக்கீட்டுக்குப் பிறகு, வேறு எவருக்கும் இன்று வரை உள் இட ஒதுக்கீடு வழங்கப் படவில்லை.

தமிழ்நாட்டில் அருந்ததியர்களையும் சேர்த்து பட்டியலினத்தில் உள்ள 76 சமூகங்களுக்கு 18% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில் பெரும்பாலான சமூகங்களுக்கு இன்னும் இட ஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்கவில்லை.

அதைக் கருத்தில் கொண்டு தான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், அதன்பின் 16 மாதங்களாகியும் அந்தத் தீர்ப்பை திமுக அரசு செயல்படுத்த மறுக்கிறது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் பி.ஆர்.கவாய் இடம் பெற்றிருந்த அமர்வு தான் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கடந்த 2022ஆம் ஆண்டு ஆணையிட்டது. அதன்பின் இன்று வரை 1335 நாள்களாகியும் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப் படவில்லை. இதற்காக ஏராளமான நடவடிக்கைகளை எடுத்தும், போராட்டங்களை நடத்தியும் கூட எந்த பயனும் ஏற்படவில்லை.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை வன்னியர்களாக இருந்தாலும், பட்டியலினத்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு சமூகநீதி வழங்கக்கூடாது என்பது தான் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் கொள்கையாக உள்ளது.

தமிழ்நாட்டின் இரு பெரும் சமூகங்களுக்கு அநீதி இழைக்கும் திமுக அரசுக்கு அந்த சமூகங்கள் வரும் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை புகட்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கரூரில் இருந்து சபரிமலைக்கு நவ. 28 முதல் சிறப்பு பேருந்துகள்

சென்னை, நவ.25-

ஒசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் கரூரிலிருந்து சபரிமலைக்கு வரும் 28ம் தேதி முதல்சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ரா.மோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கேரள மாநிலத்தில் பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஆண்டுதோறும் மண்டல பூஜை மற்றும் மகர விளக்கு திருவிழாக்களின் போது தமிழகத்தின் முக்கிய நகரங்களிலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் ஆண்டுதோறும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டும் கடந்த 16ம் தேதி முதல் சென்னை கோயம்பேடு மற்றும் கிளாம்பாக்கம், திருச்சி, மதுரை மற்றும் புதுச்சேரி, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பம்பைக்கு, அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்து மற்றும் குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி உள்ள சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக ஒசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் கரூர் பகுதியினர் பயன்பெறும் வகையில் அதிநவீன குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்து வரும் 28ம் தேதி முதல் ஜன. 16ம் தேதி வரை இயக்கப்படுகிறது.

இந்த வருடம் பக்தர்கள் கூடுதலாக பயணம் செய்ய முன்வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு சென்னை மற்றும் இதர இடங்களிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு அனுமதி பெறப்பட்டு, சிறப்பான முறையில் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், குழுவாகச் செல்லும் பக்தர்களுக்கு வாடகை அடிப்படையில் பேருந்து வசதி செய்து தரப்படும்.

எனவே, பயணிகள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து பயணிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பேருந்துகளின் விவரம் உள்ளிட்ட தகவல்களுக்கு 94450 14424 மற்றும் 94450 14463 ஆகிய செல்போன் எண்களைத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கலப்பட நெய்யில் 20 கோடி லட்டு: சிறப்பு விசாரணை குழு தகவல்

திருமலை, நவ.25-

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் கடந்த 2019 முதல் 2024 வரை லட்டு பிரசாதத்தில் கலப்பட நெய் உபயோகப்படுத்தப்பட்டது என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டினார். இதுதொடர்பாக விசாரிக்க சிபிஐ தலைமையிலான சிறப்பு விசாரணை குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது.

இந்த குழு வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 2019 முதல் 2024 வரை ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சிக் காலத்தில் திருப்பதி தேவஸ்தானம் சார்பில் கலப்பட நெய் வாங்கப்பட்டிருக்கிறது. திருப்பதி தேவஸ்தானம் சார்பில் வாங்கப்பட்ட 1.61 கோடி கிலோ நெய்யில் 68 லட்சம் கிலோ நெய் கலப்பட நெய் ஆகும். ஏழுமலையான் கோயிலில் தினமும் 3.5 முதல் 4 லட்சம் லட்டு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் 20.1 கோடி லட்டு பிரசாதங்கள் கலப்பட நெய்யினால் தயாரிக்கப்பட்டவை. இவ்வாறு சிறப்பு விசாரணை குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# புதிய தொழிலாளர் சட்டம் மிகப் பெரிய சீர்திருத்தம்: தொழில் அமைப்புகள் வரவேற்பு

சென்னை, நவ.25-

புதிய தொழிலாளர் சட்டம் என்பது, ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் அமலுக்கு வந்த பின் நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள மிகப் பெரிய சீர்திருத்தமாகும். இந்நடவடிக்கை இந்தியாவின் வணிகத்தை உலக சந்தையில் பெரிதும் உயர்த்தும் என கோவை தொழில் துறையினர் தெரிவித்தனர்.

தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கம் (டான்ஸ்சியா) துணைத் தலைவர் சுருளிவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், “புதிய தொழிலாளர் குறியீடுகளை மத்திய அரசு நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். 29 தனித்தனியான சட்டங்களை 4 முக்கிய குறியீடுகளாக ஒருங்கிணைத்தது தொழிலும் தொழிலாளர்களும் பயனடையும் முன்னேற்றமான மாற்றமாகும்.

அனைத்து ஊழியர்களுக்கும் கட்டாயமாக நியமன ஆணை வழங்கல், 10 பேருக்கு குறைவாக வேலை செய்யும் நிறுவனங்களுக்கும் ESI வழங்கப்பட்டு, அதிகமான தொழிலாளர்கள் காப்பீட்டின்கீழ் கொண்டுவருதல், ஒரே ஆண்டில் 30 நாட்கள் மட்டுமே வேலை செய்தாலும் போனஸ் பெறும் உரிமை பெறுதல் மற்றும் தொழில் நிறுவனத் தினர் உரிமங்கள் பெறும் நடை முறைகள் எளிமைப்படுத் தப்பட்டுள்ளன.

40 பேருக்கு மேல் பணியாற்றும் தொழிற்சாலைகளில் ஆண்டுதோறும் மருத்துவ பரிசோதனை, அனைத்து ஊழியர்களுக்கும் சரியான நேரத்தில் ஊதியம் வழங்குதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஓராண்டு பணி முடித்தாலே பணிக்கொடை பெறும் உரிமை, இந்திய அளவில் ஒரே மாதிரியான குறைந்தபட்ச ஊதிய அமைப்பு, மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும் குழப்பத்தை நீக்குதல் போன்ற பல்வேறு நன்மைகள் இந்த சட்டத்தில் உள்ளன. இந்த மாற்றங்கள் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உயர்த்துவதுடன், தொழில் வளர்ச்சி, வெளிப்படைத் தன்மை மற்றும் வேலை வாய்ப்பின் முறையான அமைப்புகளை அதிகரிக்க உதவும்” என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய மில்கள் சங்கத்தின் (சைமா) தலைவர் துரை பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், “சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சர் ஆர்.கே.சண்முகம் செட்டி தொடங்கிய தென்னிந்திய மில்கள் சங்கம் (சைமா) தொழிலாளர் நலன் பாதுகாப்பதிலும், பல்வேறு முற்போக்கு சட்டங்களை கொண்டு வருவதிலும் முன்னோடியாக இருந்து வருகிறது. விவசாயத்திற்கு அடுத்து நாடு முழுவதும் 11 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

புதிய தொழிலாளர் சட்டம் மிகப் பெரிய சீர்திருத்தம்: தொழில் அமைப்புகள் வரவேற்பு

புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இடதுசாரி, விசிக கட்சிகள் டிச.8ல் ஆர்ப்பாட்டம்

தற்போது வரலாற்று சிறப்புமிக்க தொழிற் சட்டங்களை பிரதமர் அமல்படுத்தி சாதனை படைத்துள்ளார். அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். புதிய சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு நலன் மற்றும் சலுகைகளை வழங்க நிறுவனங்களுக்கு செலவு அதிகரித்தாலும் தொழிலாளர்களின் நலன் இந்த புதிய சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது என்பது உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ளது.

புதிய தொழிலாளர் சட்டம் என்பது, ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் அமலுக்கு வந்த பின் நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள மிகப் பெரிய சீர்திருத்தமாகும். இந்நடவடிக்கை இந்தியாவின் வணிகத்தை உலக சந்தையில் பெரிதும் உயர்த்தும்” எனத் தெரிவித்துள்ளார்.

# சென்னை மாநகராட்சி சார்பில் 3,000 செல்லப் பிராணிகளுக்கு ஒரே நாளில் மைக்ரோ சிப் பொருத்தம்

சென்னை, நவ.25-

சென்னை மாநகராட்சி சார்பில் ஒரே நாளில் 3 ஆயிரத்து 91 செல்லப் பிராணிகளுக்கு மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது.



வீடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதற்கு உரிமம் பெறுவதை சென்னை மாநகராட்சி கட்டாயமாக்கியுள்ளது. உரிமம் பெறாவிட்டால் வரும் நவ.24ம் தேதி முதல் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும் கடந்த ஒரு மாதமாக செல்லப் பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல், நாய்களின் உரிமையாளர்கள் அவற்றை பல்வேறு காரணங்களுக்காக பராமரிக்காமல் தெருவில் விடுவதைத் தடுக்கவும், செல்லப் பிராணிகளுக்கு முறையாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகிறதா என்பதை கண்காணிக்கவும் மைக்ரோ சிப்பை இலவசமாகப் பொருத்தி வருகிறது.

7 இடங்களில் சிறப்பு முகாம்கள்: இதற்கான சிறப்பு முகாம்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக நேற்று புளியந்தோப்பு, கண்ணம்மாபேட்டை, லாயிட்ஸ் காலனி உள்ளிட்ட 6 இடங்களில் உள்ள செல்லப்பிராணி சிகிச்சை மையங்கள் மற்றும் சோழிங்கநல்லூரில் உள்ள நாய் இனக்கட்டுப்பாடு மையம் ஆகிய 7 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. இதில் நேற்று ஒரே நாளில் 3091 செல்லப் பிராணிகளுக்கு ரேபிஸ் நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோ சிப் பொருத்தப்பட்டது. உரிமம் வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

33,418 செல்லப் பிராணிகளுக்கு... இதுவரை 77,707 செல்லப் பிராணிகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 33,418 செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000